தரம் 6

முதலாந் தவணைப் பரீட்சை - 2018


கணிதம் 2619

பெயர் :

நேரம் : 2 மணித்தியாலம்

பகுதி I

♦ எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

(1) 

தரப்பட்டுள்ள பொருட் தொகுதியிலிருந்து வட்டம் வரைவதற்கு பயன்படுத்தப்படும் ஏதாவது இரண்டு பொருட்களைத் தெரிவு செய்து அதன் இலக்கங்களை எழுதுக. .....


(2) "நான்கு மில்லியன் இரண்டாயிரத்து நானூற்று அறுபத்து மூன்று" எனும் எண்ணை நியம வடிவில் எழுதுக.

(3) கூட்டுக. 532 + 254 = ...

(4) 67 534 எனும் எண்ணின் 7 வகைக் குறிக்கும் பெறுமானம் யாது?

(5) கீறிட்ட இடங்களை நிரப்புக.

i) 435 267 x ..... = 435 267 ii) 0 ÷ 25 364 = ...

(6) 

கடிகார முகத்தில் காட்டும் நேரத்தை மணித்தியாலம், நிமிடம், செக்கன் இல் தருக.

..... மணி ..... நிமி. ..... செக்கன்

(7) பி.ப. ..... மணிக்கு ஆரம்பித்த தொலைக்காட்சி நாடகமொன்று பி.ப. 8.15 க்கு முடிவடைந்தது. இந் நிகழ்ச்சி காண்பிக்கப்பட்ட நேரம் 1 மணித்தியாலம் 15 நிமிடங்கள் எனின், வெற்றிடத்திற்கு வரவேண்டிய நேரம் யாது?

(8) தொடர்புபடுத்துக.

105 செக்கன்கள்	♦ 48 மணித்தியாலங்கள்
	♦ 1 மணித்தியாலம் 45 செக்கன்கள்
2 நாட்கள்	♦ 44 மணித்தியாலங்கள்
	♦ 1 மணித்தியாலம் 35 செக்கன்கள்

(9) "ஆறு பெரிது இரண்டிலும்" என்பதை சமனிலியாகக் காட்டுக.


(10) 4 , 0 , -5 , 2 , -2 எனும் எண்களில் மிகப் பெரிய எண்ணையும், மிகச் சிறிய எண்ணையும் எழுதுக.


i) மிகப் பெரிய எண் : ..... ii) மிகச் சிறிய எண் : .....

Scanned by CamScanner

(11) ஓர் எண்ணை கிட்டிய 10 இற்கு மட்டந்தட்டிய போது 50 ஆகும். அவ்வெண்ணாக இருக்கக்கூடிய இரு எண்களை எழுதுக.

(12) பின்வரும் கடிகாரங்களில் மணி முள்ளுக்கும் நிமிட முள்ளுக்கும் இடையில் செங்கோணத்தைக் காட்டும் ஒரு சந்தர்ப்பத்தை வரைந்து காட்டுக.



(13) 

உருவில் P, Q என்பவற்றால் காட்டப்பட்டுள்ள திசைகளை எழுதுக.

P ..... Q .....

(14) தேங்காய்க் குவியலொன்றில் 879 தேங்காய்கள் உள்ளன. அவற்றில் 297 தேங்காய்கள் விற்கப்பட்டதெனின் மீதியாகவுள்ள தேங்காய்கள் எத்தனை?

(15) வீடொன்றில காணப்படும் சுவர், தரை (சீமெந்து இடப்பட்ட), சீலிங், கதவு என்பவைகளில்,

i) கிடையானவை எவை? .....

ii) நிலைக்குத்தானவை எவை? .....

(16) கூட்டுக.

	மணி	நிமி
	3	45
+	2	25

(17) இடைவெளி நிரப்புக.

$$\begin{array}{r} \square 3 \\ 11 \overline{)\,2\,5\,3} \\ 2\,2 \\ \hline \square 3 \\ 3\,3 \\ \hline 0 \end{array}$$

(18) மண்டபமொன்றில் ஒரு நிரலில் 47 கதிரைகள் வீதம் 35 நிரைகள் உண்டு. மண்டபத்தில் உள்ள கதிரைகளின் எண்ணிக்கை யாது?


(19) இலங்கை சுதந்திரம் அடைந்த திகதி : ஆண்டு - 1948, மாதம் - பெப்ரவரி, திகதி - 4
இத்திகதியை நியம முறையில் எழுதுக.

(20) இரு முழு எண்களின் கூட்டுத்தொகை 41 ஆகும். பெரிய எண்ணிலிருந்து சிறிய எண்ணைக் கழித்தால் 11 பெறப்படும். இரு எண்களையும் காண்க.

Scanned by CamScanner

பகுதி II

♦ முதலாம் வினா உட்பட மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.



(1) a) i) எண் சட்டத்தில் காட்டப்பட்டுள்ள எண் யாது?

ii) 3, 2, 8, 1 எனும் இலக்கங்களை ஒரு தடவை மட்டும் பயன்படுத்தி எழுதக்கூடிய மிகப் பெரிய எண்ணை எழுதுக.

iii) எண் ஒன்றை வலயங்களாக எழுதும் போது வலயமொன்றில் எழுதக்கூடிய இலக்கங்களின் எண்ணிக்கை எத்தனை?

iv) 6830552147 எனும் எண்ணை நியம வடிவில் எழுதுக.

v) மேலே நீர் எழுதிய எண்ணில் இலக்கம் 6 எந்த வலயத்தில் காணப்படுகிறது?

vi) 82651 எனும் எண்ணை விரித்து எழுதுக. (12 புள்ளிகள்)

b) i) மிகப் பெரிய வலயம் பில்லியன் வலயமாக அமையும்படி எழுதக் கூடிய மிகப் பெரிய எண் யாது?

ii) அவ்வெண்ணை சொற்களில் எழுதுக. (6 புள்ளிகள்)

---

(2) a) i) நீர் விரும்பிய அளவில் வட்டமொன்றை வரைக.

ii) அவ்வட்டத்தினுள் X , Y , Z என்ற எழுத்துக்களை எழுதுக.

iii) அவ்வட்டத்தின் மீது A , B என்ற எழுத்துக்களை எழுதுக.

iv) அவ்வட்டத்துக்கு வெளியே P எனும் எழுத்தை எழுதுக.

b) குமார் 5 பாடங்களில் பெற்ற புள்ளிகள் பின்வருமாறு:

பாடம்	புள்ளி	கிட்டிய 10 இற்கு மட்டந்தட்டல்
கணிதம்	44	.....
தமிழ்	57	.....
விஞ்ஞானம்	35	.....
வரலாறு	59	.....
ஆங்கிலம்	46	.....

i) இப்புள்ளியைக் கிட்டிய 10 இற்கு மட்டந்தட்டுக.

ii) மட்டந்தட்டிப் பெற்ற புள்ளிகளின் கூட்டுத்தொகை யாது?

---

(3) a) கீறிட்ட இடங்களை நிரப்புக.

i) 190 X ..... = 190 000 ii) 9401 ÷ 1 = ...

b) சுருக்குக.

i) 3434 + 97 ii) 8432 - 958 iii) 4382 X 25 iv) 3230 ÷ 19

---

(4) விவசாயக் கிராமமொன்றில் உள்ள விவசாயிகளில் 47 பேர் நெற்செய்கையிலும், 10 பேர் சோளப் பயிர்ச்செய்கையிலும், 20 பேர் மரக்கறிப் பயிர்ச்செய்கையிலும் ஈடுபட்டுள்ளனர்.

i) இம் மூன்று பயிர்ச்செய்கையிலும் ஈடுபடும் விவசாயிகளின் எண்ணிக்கை யாது?

சென்ற போகம் வரட்சியால் பாதிக்கப்பட்டதால், அரசாங்கத்தால் வரட்சி நிவாரணம் வழங்கப்பட்டது.

ii) நெற்செய்கையில் ஈடுபட்ட ஒருவருக்கு நிவாரணமாக ரூபா 9500 வழங்கப்பட்டதெனின் நெற்செய்கைக்கு வழங்கிய மொத்த நிவாரணம் எவ்வளவு?


iii) சோளப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டோருக்கு வழங்கிய மொத்த நிவாரணம் ரூபா 84 000 எனில், ஒருவருக்கு கிடைத்த நிவாரணப் பணம் எவ்வளவு?

iv) மரக்கறிப் பயிர்ச்செய்கைக்கான நிவாரணப் பணம், சோளப் பயிர்ச்செய்கைக்கு வழங்கிய நிவாரணப் பணத்தின் அரைவாசியாகும். அத்தொகை எவ்வளவு?

v) நிவாரணமாக வழங்கிய மொத்தப் பணத்தைக் காண்க.

Scanned by CamScanner

(5) a)



i) எண் கோட்டில் A , B, C , D என்பவற்றால் குறிக்கப்படும் எண்களை எழுதுக.
ii) இவ்வெண்களை இறங்குவரிசையில் எழுதுக.


b) அடைப்பினுள் தரப்பட்டுள்ள எண்களில் பொருத்தமான எணணைத் தெரிவு செய்து இடைவெளிகளை நிரப்புக.

i) -4 < ..... (- 5 , -2) ii) ..... < - 2 (-3 , -1)

ii) -1 இற்கும் 1 இற்கும் இடையில் எத்தனை நிறையெண்கள் உள்ளன?


---

(6) i)



உருவில் a , b , c , d , e எனும் எழுத்துக்களால் காட்டப்பட்டிருக்கும் கோணங்களின் வகைகளை எழுதுக.

ii)



மட்டமான தரையில் அமைந்துள்ள சதுர வடிவ பயிர் நிலமொன்றின் மூலைகள் A , B , C , D ஆகும். ஒருவர் ஒரு மூலையிலிருந்து மற்றைய மூலைக்கு அவற்றை இணைக்கும் நேரான பாதையில் செல்கின்றான். பின்வரும் சந்தர்ப்பங்களில் அவர் செல்லும் திசைகளைக் காண்க.

i) A இலிருந்து B இற்கு ii) B இலிருந்து D இற்கு
iii) C இலிருந்து A இற்கு iv) D இலிருந்து A இற்கு

---

(7) a) i) கூட்டுக.

	நாள்	மணி
	8	15
+	3	19

ii) கழிக்குக.

	நிமி	செக்கன்
	10	30
-	4	50

b) கலைமகள் வித்தியாலய பரிசளிப்பு விழா நிகழ்ச்சி நிரல் வருமாறு:

மு.ப	9.15	அதிதிகள் வருகை தரல் (விழா ஆரம்பம்)
மு.ப	9.20	மங்கல விளக்கு ஏற்றல்.
மு.ப	9.25	வரவேற்புரை
மு.ப	9.40	பரிசு வழங்கல்
மு.ப	10.15	பிரதம அதிதி உரை
மு.ப	10.30	நன்றி உரை
மு.ப	10.40	விழா நிறைவு

i) இவ்விழாவுக்கு ஒதுக்கிய காலத்தை மணித்தியாலம், நிமிடத்தில் காண்க.
ii) பரிசு வழங்கலுக்கு ஒதுக்கப்பட்ட காலம் யாது?
iii) பரிசு வழங்கலுக்கு ஒதுக்கிய காலத்தை செக்கன்களில் தருக.
iv) விழா ஆரம்பித்த நேரத்தை சர்வதேச நியம முறையில் தருக.

Scanned by CamScanner